# சோழவந்தான் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை : திரு.ச.செல்வக்குமார்

ந.க. எண் : 42-1 /2023 நாள் : 18.01.2024

பொருள்: மனைப்பிரிவு – முறைப்படுத்துதல் – சோழவந்தான் பேரூராட்சி – சோழவந்தான் கிராமம் – சர்வே எண்கள். 449/2, 449/3எ ,623/1எ1 ,624/1, 624/2ல், 4.52 ஏக்கர் – பரப்பளவு 18292 ச.மீ, பரப்பளவு இடத்தில் 71 மனையிடங்களுக்கு இறுதி ஒப்புதல் வழங்குவது – தொடர்பாக.

பார்வை: 1)நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களின் கடித ந.க.எண்.7905/2022/SWP/2022/TCP நாள்23.03.2023
2)சோழவந்தான், சார்பதிவாளர் தானப்பத்திர பதிவு எண் 780 /2023, 780 /2023 நாள்.31.03.2023
3)சோழவந்தான் பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.103 நாள்.12.01.2023
4) தொடர்புடைய ஆவணங்கள்

------

உத்திரவு :

மதுரை மாவட்டம் சோழவந்தான் கிராமம் சர்வே எண்கள். 449/2, 449/3எ ,623/1எ1 ,624/1, 624/2ல், 4.52 ஏக்கர் – பரப்பளவு 18292 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனையிடங்களை அரசாணையின்படி நடவடிக்கை மேற்கொண்டு வரைபடம் முறைப்படுத்திட கோரப்பட்டத்தில் பார்வை 1ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் / செயலர் அவர்களின் கடித எண் 7905 /2022 /SWP /2022 /TCP ,நாள். 23.03.2023 ன்படி நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மனையிடத்தில் 71 மொத்த பரப்பளவு 18292 ச.மீ.ஆகும். பொது ஒதுக்கீடு (OSR) செய்யப்பட வேண்டிய திறவிட பகுதிக்கு (பூங்கா) 1392.62 ச.மீ.ஆகும். 779/2023 ல் தானபத்திரம் உள்ளாட்சி அமைப்பிற்கு பதிவு செய்து கொடுத்துள்ளார். பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்பிற்கு 102.13ச.மீ பரப்பளவுள்ள இடமும் சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் 4851.37ச.மீ இடம், என ஆவண எண். 779 /2023, 780 /2023 நாள்.31.03.2023ன்படி பொது இடங்கள் பேரூராட்சிக்கு தானமாக வழங்கிட ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

**இம்மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்க மனுதாரரால் பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட விபரம்**

1)பேரூராட்சிக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட 1392.62 ச.மீ வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

**2) தார்ச்சாலை , மழைநீர் வடிகால் மற்றும் தெருவிளக்கு அமைக்கப்பட்டுள்ள விபரம்**

1) மெயின்சாலை மற்றும் மூலை முடக்குகள் சேர்த்து 4851.37 சதுரமீட்டர், தார்ச்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது

2)தெருவிளக்கு அமைப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு காசோலை எண்.089280, நாள்.06.09.2023ன்படி ரூ.285500 செலுத்தப்பட்ட இரசீது ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மதுரை மண்டலம் நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநரது கடிதம் ந.க.எண். ந.க.எண்.7905/2022/SWP/2022/TCP,நாள்23.03.2023ன் தொழில்நுட்ப அனுமதியில் தெரிவிக்கப் பட்டுள்ள மேற்காணும் நிபந்தனைகளில் காணப்படும் அடிப்படை வசதிகள் தார்ச்சாலை , மழை நீர் வாடிகல் , குடிநீர் வசதி மற்றும் தெரு விளக்கு அமைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிபந்தனைக்குட்பட்டு ஒவ்வொரு மனைகளுக்கும் பரிசீலனைக்கட்டணம் ரூ. 500/- வீதம் 71 மனைகளுக்கு ரூ.35500/– , கூராய்வுக்கட்டணம் ரூ.1000/– வீதம் 71 மனைகளுக்கு ரூ71000/– , இதர கட்டணமாக ரூ.1439850/–ம் ஆகமொத்தம் ரூ1546350/–ஐ தமிழ்நாடு கிராம வங்கி வரைவோலை எண் 090790 மற்றும் 090793 நாள்.05.01.2024ன்மூலம் செலுத்தப்பட்டு பேரூராட்சி அலுவலகத்தில் ஒப்படைக்கட்டுள்ளது.

எனவே, மதுரை மாவட்டம், சோழவந்தான் பேரூராட்சிக்குட்பட்ட சோழவந்தான் வருவாய் கிராம எண்கள். 449/2, 449/3எ ,623/1எ1 ,624/1, 624/2ல், 4.52 ஏக்கர் – பரப்பளவு 18292 ச.மீ பரப்பளவில் உள்ள 71மனைகள் மதுரை மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநரது பார்வை 1ன்படி மேற்படி மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, அனைத்து அடிப்படை வசதிகள் செய்து முடிக்கப்பட்டு, பார்வை 3ல் காணும் இப்பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.103 நாள்.12.01.2024ன் படி அனுமதி வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளபடியால் 71 மனைகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

18/01/2024

செயல் அலுவலர் (பொ),
சோழவந்தான் பேரூராட்சி
மதுரை மாவட்டம்.

18/1/2024

**இணைப்பு :**

- வரைபடம்.

பெறுநர் :

திரு.ராஜசேகரன்
26, காமாட்சியம்மாள் கோவில் தெரு
திருமங்கலம், மதுரை மாவட்டம்.

நகல் :

- நகர் ஊரமைப்புத்துறை, மதுரை மண்டல துணை இயக்குநருக்கு தகவலுக்காக.
- மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
- உதவி இயக்குநர், நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை வாடிப்பட்டி வட்டம், மதுரை.
- சார்பதிவாளர் , சோழவந்தான் சார்பதிவகம்.
- இருப்பு கோப்பிற்கு.